# ජාතික අධ්‍යාපන කොමිෂන් සභාව

වාර්ෂික වාර්තාව

2014

# தேசிய கல்வி ஆணைக்குழு

## வருடாந்த அறிக்கை

2014

# National Education Commission

## Annual Report

2014

නො. 126, නාවල පාර, නුගේගොඩ - 126 எனும், முகவரியில் அமைந்துள்ளது - No.126, Nawala Road, Nugegoda

**உள்ளடக்கம்** **இலக்கம்**


1. அறிமுகம் 34
2. செயற்பாட்டுப் பணிகள் 36
3. ஆணைக்குழுவின் உள்ளடக்கம் 37
4. நோக்கம் மற்றும் செயற்சாதனைச் சுட்டி 38
5. செயற்சாதனைச் சுருக்கம் - 2014 39
6. வரவுசெலவு ஏற்பாடு மற்றும் நிதிமுன்னேற்றம் - 2014 45
7. இணைப்பு

இணைப்பு I – நிலையான வருமானத்தை கையகப்படுத்திக் கொள்ளல் - 2014 46

இணைப்பு II – ஒதுக்கீட்டுக் கணக்கு – 2014 47

இணைப்பு III – ஆணைக்குழு உறுப்பினர்களது தகவல்கள் - 2014 48

இணைப்பு IV – கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2014 49

இணைப்பு V – நிறுவனக் கட்டமைப்பு 64

## அறிமுகம்

1991 இலக்கம் 19 கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தினால் தேசிய கல்வி ஆணைக்குழுவானது, கல்விக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் என்பவற்றை உடனே மீளாய்வு செய்தல் மற்றும் விரிவான தேசியக் கல்விக் கொள்கை சம்பந்தமாக சனாதிபதி அவர்கட்கு விதப்புரைகளை சமர்ப்பித்தலினையும் உள்ளடங்களாக கல்விக் கொள்கைகளை இடைவிடாது நிலைநிறுத்திச் செல்லுவதனை உறுதிப்படுத்துதல் மற்றும் சமுதாயத்தில் மாற்றமடையும் தேவைகளுக்கு கல்விமுறையானது இணக்கத் தன்மையினை காட்டும் கருத்துடன் கல்விக் கொள்கைகளின் சகல துறைகள் தொடர்பாக சனாதிபதி அவர்கட்கு விதப்புரைகளை சமர்ப்பிக்கும் அபிப்பிராயத்துடன் தாபிக்கப்பட்டது.

இதன் முதலாவது ஆணைக்குழுவானது 1991 – 1996 காலப்பகுதியின் பொருட்டு நியமிக்கப்பட்டது. இரண்டாவது ஆணைக்குழு 1996 ஒக்டோபர் 01 ஆம் திகதியிலிருந்து 2001 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை செயற்பட்டது. மூன்றாவது ஆணைக்குழு 2001 ஒக்டோபர் 01 ஆம் திகதியிலிருந்து 2004 மே 30 ஆம் திகதி வரை செயற்பட்டது. நான்காவது ஆணைக்குழு 2004 ஜூலை 01 ஆம் திகதியிலிருந்து 2006 மார்ச் வரையில் செயற்பட்டது. ஐந்தாவது ஆணைக்குழு 2006 ஏப்ரல் 10 ஆம் திகதியிலிருந்து தனது கடமைகளை ஆரம்பித்ததுடன் அதன் பதவிக்காலம் 2011 ஏப்ரல் 09 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. ஆறாவது ஆணைக்குழுவின் சுயாதீன முதலாவது ஆணைக்குழுக் கூட்டம் 2012 நவம்பர் 20 ஆம் திகதி நடாத்தப்பட்டது. தமது உத்தியோகபூர்வ கடமைகளை தற்போது வரையில் வினைத்திறனுடன், 1991 இலக்கம் 19 கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம், ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நடிபங்கு மற்றும் கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றி வருகின்றது.

2014 ஆம் வருடம் தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளராக பேராசிரியர் லக்ஸ்மன் ஜயத்திலக்க அவர்களும், உப தவிசாளராக கலாநிதி ஜயந்தி குணசேக்கர அவர்களும், செயலாளராக திருமதி. P.G.D. பிரதீபா சேரசிங்க அவர்களும் பணிகளை மேற்கொண்டனர்.

**நோக்கு**

இலங்கையன் என்ற அடையாளத்தைப் பேணுதல் சகல பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்தல் சமச்சீரான ஒரு சமூகத்தை உருவாக்குதல் போன்ற நோக்கங்களுக்காக யாவருக்கும் கருத்துள்ள கல்வியை வழங்குதல்

**பணி**

சமூகத்தின் மாறிவரும் தேவைகளைக் கருத்திற்கொண்ட முறையிலான கல்வி முறையை உருவாக்குவதற்கு ஏற்ற தேசிய கல்விக் கொள்கையை விருத்தி செய்து வளமான இலங்கையைப் பரிணமிக்கச் செய்தல்

## செயற்பாட்டுப் பணிகள்

தேசிய கல்விக் கொள்கைகள் தொடர்பாக அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு விதப்புரைகளை சமர்ப்பிக்கும் நோக்கில் 1991 இலக்கம் 19 கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவின் வாயிலாக பிரதானமாக நிறைவேற்றப்படும் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ). கல்விக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை உடன் மீளாய்வு செய்தல், விரிவான கல்விக் கொள்கைகள் சம்பந்தமாக சனாதிபதி அவர்களுக்கு விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதனை உள்ளடக்கியதாக கல்விக் கொள்கைகளின் தொடர்ச்சி நிலைநிறுத்திச் செல்லப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் சமுதாயத்தில் மாற்றமடையும் தேவைகளுக்கு கல்வி முறை இணக்கத்தைக் காட்டும் பொருட்டு, கல்விக் கொள்கையின் சகல துறைகள் தொடர்பாக சனாதிபதி அவர்கட்கு விதப்புரைகளைச் சமர்ப்பித்தல்.

(ஆ). நடைமுறையிலுள்ள தேசிய கல்விக் கொள்கை மற்றும் திட்டம் அல்லது திட்டங்கள் முன்னதாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுசெய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பவற்றையும் அத்துடன் தேவையானபோது அக் கொள்கையில், திட்டத்தில் அல்லது திட்டங்களில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களை சனாதிபதி அவர்கட்கு விதந்துரைத்தல்.

(இ). ஆணைக்குழுவின் ஆலோசனைகளின் பொருட்டு சனாதிபதி அவர்களால் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படக்கூடிய, கல்விக்கு ஏற்புடைய சகல விடயங்கள் தொடர்பாகவும் சனாதிபதி அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

## ஆணைக்குழுவின் உள்ளடக்கம்

(அ) 1978 இலக்கம் 16 கொண்ட பல்கலைக்கழக சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தவிசாளர்,

(ஆ) 1990 இலக்கம் 20 கொண்ட மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தவிசாளர்,

(இ) கல்வி மற்றும் உயர்கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்

(ஈ) நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்,

(உ). மாகாணசபைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், சனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்,

(ஊ). கல்வி, நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் ஆகிய துறைகளில் திறன்களை காட்டியுள்ளோர் அல்லது யாதேனும் தொழிற்றுறையில் நிபுணத்துவத்தினைப் பெற்றுள்ள நபர்களிடையே சனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் வேறு பத்து உறுப்பினர்கள். 5 ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் தவிசாளர், உப தவிசாளர் (கொள்கை) மற்றும் உப தவிசாளர் (திட்டமிடல்) ஆணைக்குழுவின் முழுநேர உறுப்புரிமையைக் கொண்டிருப்பர்.

எனினும், 2004 ஆம் வருடம் தொடக்கம் ஒரு உப தவிசாளரால் மேலே உப தவிசாளர் பதவிகள் இரண்டும் (கொள்கை மற்றும் திட்டமிடல்) தழுவப்படலாயிற்று.

தற்போது இவ் ஆணைக்குழு, நுகேகொட, நாவல வீதி இலக்கம்: 126 கொண்ட நிலையத்தில் அமைந்துள்ளது. சனாதிபதி அவர்களால் நியமனஞ் செய்யப்படும் ஆணைக்குழுவின் செயலாளர், நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக செயற்படுவார். தற்போது ஆணைக்குழுவின் நிரந்தர பணியாளர் சபை 32 பேரினைக் கொண்டதாகும்.

## இலக்குகளும் செயற்சாதனைச் சுட்டியும்

| | செயற்பாடுகள் | நோக்கம் | செயற்சாதனைச் சுட்டி |
|---|---|---|---|
| 01 | பொதுக் கல்வி தொடர்பாக கொள்கைப் பிரேரணைகளை ஆக்குதல். | பொதுக் கல்வி தொடர்பாக கொள்கைப் பிரேரணைத் தொகுதியொன்றின் வழங்குகைக்குப் பங்களிப்புச் செய்தல். | பொதுக் கல்வி தொடர்பாகவான கொள்கை வெளியீட்டினை (03 மொழி ஊடகங்களிலும்) ஆக்குதல். |
| 02 | உயர் கல்வி தொடர்பாக கொள்கைப் பிரேரணைகளை ஆக்குதல். | உயர்கல்வி தொடர்பாக கொள்கைப் பிரேரணைத் தொகுதியொன்றின் வழங்குகைக்குப் பங்களிப்புச் செய்தல். | உயர் கல்வி தொடர்பாகவான கொள்கை வெளியீட்டினை (03 மொழி ஊடகங்களிலும்) ஆக்குதல். |
| 03 | தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விக்கு ஏற்புடைய கொள்கைப் பிரேரணைகளை ஆக்குதல். | தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விக்கு தொடர்பாக கொள்கைப் பிரேரணைத் தொகுதியொன்றின் வழங்குகைக்குப் பங்களிப்புச் செய்தல். | தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விக்கு தொடர்பாகவான கொள்கை வெளியீட்டினை (03 மொழி ஊடகங்களிலும்) ஆக்குதல். |
| 04 | வகை 3 பாடசாலைகளின் தகவல்கள் அடங்கிய தரவுத் தளத்தினை ஆக்குதல் | இலங்கையில் வகை 3 பாடசாலைகளின் பௌதீக மற்றும் மனிதவளங்கள் பற்றிய தகவல்கள், நிதிவளங்கள் பற்றிய தகவல்கள், நிதித் தகவல்கள், கற்றல் முறைகள் உள்ளடக்கப்படும் விதமாக தரவுகள் மற்றும் தகவல்கள் உள்ளடங்கிய தரவுத் தொகுதியொன்றினை நிர்மாணித்தல். | மேல்மாகாணம் இறுதி அறிக்கையினைத் தயாரித்தல். |
| 05 | சிங்கள மொழிப் பயன்பாடு மற்றும் தரப்படுத்துதல் தொடர்பான கற்கை | சிங்கள மொழிப் பயன்பாடு பற்றிய தரப்படுத்துதலினை மேற்கொள்ளுதல். | பரிந்துரையுடன் கூடிய அறிக்கையினைத் தயாரித்தல். |
| 06 | தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை ஆடசேர்ப்புச் செய்யும் கொள்கைகள் மற்றும் அதன்போது கவனத்திற் கொள்ளப்படும் நியதிகள் தொடர்பான கற்கை. | முறைமையினுள் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ளுதலின் பொருட்டு ஆசிரியர்களை ஆட்சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் ஈடுபடுத்துதல் மீது தாக்கஞ் செலுத்தும் காரணிகளை இனங்காணல். | பரிந்துரையுடன் கூடிய அறிக்கையினைத் தயாரித்தல். |
| 07 | க.பொ.த (உ.தரம்) தொழில்நுட்பமுறைமை பாடவிதானம் அமுல்படுத்தப்படுதல் தொடர்பான கற்கை | *பாடசாலை அமைப்பில் பாடநெறியைப் படிப்பதற்கும், அதன் செயலாக்கத்தில் சிக்கல்கள் மற்றும் கட்டுப்பாடுகளை எவ்வாறு கையாள்வது என்பதும்.* | பரிந்துரையுடன் கூடிய அறிக்கையினைத் தயாரித்தல். |

## செயற்சாதனை சுருக்கம் – 2014

### அறிமுகம்

தேசிய கல்வி ஆணைக்குழுவிடம் சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான கடமைப்பொறுப்புக்களை கீழ்வருமாறு மூன்று அடிப்படைத் துறைகளின் கீழ் வகைப்படுத்த முடியும்.

1. திட்ட மீளாய்வு மற்றும் பகுப்பாய்வின் மூலமாக தேசத்தின் கல்விக் கொள்கை விமரிசனம்.

2. காலத்திற்கு பொருந்தும் விதமாக நிலவும் கல்விக் கொள்கை பிரேரணைகளை நவீனமயப்படுத்துதல்.

3. மேற்குறிப்பிட்ட மீளாய்வு, பகுப்பாய்வு, விமரிசனம், நவீனமயப்படுத்துகை அனைத்தையும் பின்புலமாகக் கொண்டு தேசத்திற்கு உகப்பான கல்விக் கொள்கைகளை சனாதிபதி அவர்களிடம் விதந்துரைத்தல்.

மேற்குறிப்பிட்ட பணிகளை பூரணப்படுத்துவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் கீழ்வரும் பிரதான விடயத்துறைகள் மூன்றின் கீழ் நிரந்தரமான மூன்று குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

1. பொதுக் கல்வி தொடர்பான நிரந்தர குழு

2. உயர் கல்வி தொடர்பான நிரந்தர குழு

3. தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான நிரந்தர குழு

ஒவ்வோர் துறை தொடர்பாகவும் விசேட அறிவினைக் கொண்டுள்ள நிபுணர்கள், அத்துறைகளில் மிகுந்த அனுபவங்களைக் கொண்ட வல்லுநர்கள் மற்றும் ஏற்புடைய துறையில் பல்வகைப்பட்ட புலமைகளை வெளிக்காட்டியுள்ள தனியார் துறைகளின் புத்திஜீவிகள் ஆகியோரை முதன்மையாகக் கொண்ட பிரதான பங்குதாரர் 15 – 20 இடைப்பட்ட எண்ணிக்கை கொண்டோர் வீதம் இந் நிரந்த குழுக்கள் மூன்றும் உள்ளடக்கப்படும். 2014 ஆம் வருடம் இந் நிரந்தர குழுக்களின் தலைமைத்துவமானது பின்வரும் மூன்று புத்திஜீவிகளால் வகிக்கப்படுகின்றது.

1. பொதுக் கல்வி தொடர்பான நிரந்தர குழு – திரு. ஆரியரத்ன ஹேவகே அவர்கள்

2. உயர் கல்வி தொடர்பான நிரந்தர குழு – பேராசிரியர் க்ஸனிக்கா ஹிரிம்புரேகம அவர்கள்

3. தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான நிரந்தர குழு – பேராசிரியர் தயந்த விஜேசேக்கர அவர்கள்

தேசிய கல்வி ஆணைக்குழு உறுப்பினர்களினதும் மேலே காட்டப்பட்ட நிரந்தர குழு உறுப்பினர்களினதும் விசேட அறிவு மற்றும் தேசிய கல்வி ஆணைக்குழு பணியாளர் சபையின் நீண்டகால அனுபவத்தினையும் பயன்படுத்தி தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 2014 ஆம் வருடத்தினுள் நிறைவேற்றப்பட்ட செயற்சாதனைகளை கீழ்வருமாறு பொழிப்பாக்க முடியும்.

# 1. பொதுக்கல்வி தொடர்பான செயற்சாதனை

## 1.1 பொதுக்கல்வி தொடர்பான கொள்கைப் பிரேரணைத் தொகுதியொன்றினை ஆக்குதல்.

பொதுக்கல்வி தொடர்பான தேசிய கொள்கைப் பிரேரணை சம்பந்தமான அடிப்படையினை ஆக்கிக் கொள்ளுவதன் பொருட்டு அதன் சகல பிரிவுகளும் தழுவப்படும் விதமாக 10 துறைகளின் கீழ் ஆராய்ச்சிக் கற்கைகளில் ஈடுபடுதல் 2013 ஆம் வருட முடிவு மற்றும் 2014 வருட முதற் காற்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆராய்ச்சிக் கற்கைகள் 10 இன் வாயிலாகவும் வெளிப்பட்ட விடயங்கள் மற்றும் கொள்கையளவிலான தீர்மானம் பற்றிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைளைப் பெற்றுக்கொள்ளுவதன் பொருட்டு செயலமர்வொன்று கல்வியமைச்சின் பணிப்பாளர்கள், மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம், மேலதிக பணிப்பாளர் நாயகங்கள், விடயப் பணிப்பாளர்கள், பரீட்சை ஆணையாளர் நாயகம் மற்றும் ஆணையாளர்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பீடாதிபதிகள், உப பீடாதிபதிகள் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகிய கல்வியியலாளர்களின் பங்குபற்றுதலுடன் 2014 ஜுன் மாதத்தில் இடம்பெற்றது.

கொள்கைப் பிரேரணை வரைவினை ஆக்கும் வதிவிடச் செயலமர்வொன்று ஆகஸ்ட் மாதம் 28 மற்றும் 29 ஆகிய இரு தினங்கள், அறிவினை அடிப்படையாகக் கொண்ட பாடசாலைகள் முறைமையினை மாற்றியமைக்கும் செயற்றிட்டம் (TSEP – Transforming School Education system as he Foundation of a knowledge project) உலக வங்கியின் உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பொதுக்கல்வி கொள்கை வரைவுப் பிரேரணைத் தொகுதியினை 2014 ஆம் வருட முடிவில் தயாரித்து முடிவுறுத்தி ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க இயலாமற் போயிற்று.

## 1.2 வகை 3 பாடசாலைகளின் தகவல்கள் அடங்கிய தரவுத் தளத்தினை ஆக்குதல்

மேல் மாகாணத்தின் சகல வகை 3 பாடசாலைகளிடமிருந்து ஏற்புடைய தகவல்கள் வருடத்தில் முதலாம் காற்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்டன. அத் தகவல்கள் தரவுத் தளங்களுக்கு பொருத்தமான விதத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

முதலாம் காற்பகுதியில் மேல் மாகாணத்திற்கு ஏற்புடைய தகவல்கள் சேகரிக்கப்பட்டதுடன் இரண்டாம் காற்பகுதியாகும் போது வடமேல் மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர்களின் பொருட்டு விளக்கமளிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. அதன் வாயிலாக அவர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளுவதன் வாயிலாக வடமேல் மாகாணத்தின் சகல வகை 3 பாடசாலைகளினது தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

2014 வருத்தின் மூன்றாம் காற்பகுதியில் சபரகமுவ மாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டு அவர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொண்டதன் வாயிலாக சபரகமுவ மாகாணத்தின் வகை 3 பாடசாலைகளின் தகவல்கள் 2014 ஆம் வருடம் நிறைவடையும் போது தேசிய கல்வி ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்றிருந்தது.

2014 ஆம் வருடம் நிறைவடையும் போது இம் மாகாணங்கள் 3 இனதும் (வடமேல், மேல், சபரகமுவ) தரவுகள் தேசிய கல்வி ஆணைக்குழுவின் பணியாளர் சபையினால் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

## 1.3 தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களை ஆடசேர்ப்புச் செய்யும் கொள்கைகள் மற்றும் அதன்போது கவனத்திற் கொள்ளப்படும் நியதிகள் தொடர்பான கற்கை

திறமைவாய்ந்த நிர்மாணிப்புத் திறன்மிக்க மற்றும் வினைத்திறனான ஆசிரியர் ஒருவரை உருவாக்கிக் கொள்ளுவதன் பொருட்டு தாபிக்கப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆரம்பத்தின் போது மிகவும் விளைதிறன்மிக்க மற்றும் ஒழுங்குமுறை கொண்டதாக செயற்படினும் நிகழ்காலத்தில் அவற்றின் பணிகள் ஓரளவு ஒழுங்கற்ற நிலைமையில் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும்,

இந் நிறுவனங்கள் தொடர்பாக ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் ஒழுங்குவிதிகள் ஆரம்பத்திலிருந்த கொள்கையிலிருந்து அப்பால் மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. ஆசிரிய மாணவர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும்போது பாடசாலை முறைமையில் உள்ள ஆசிரியர் தேவைப்பாடுகள் தொடர்பாக உரிய விதமாக கவனத்திற் கொள்ளப்படுகின்றதா என்பது பிரச்சினைக்குரியதொன்றாகும். அவ்வாறே, அக் கொள்கைகள் மற்றும் ஏற்புடைய நியதிகள் தற்கால சமுதாயத்திற்கு யதார்த்தபூர்வமாக பொருத்தமுடையதா என்பது மேலும் பிரச்சினையுடையதாகும். இவ் விடயங்கள் தொடர்பாக கருத்திற் கொண்டு தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவர்களைச் ஆடசேர்த்துக் கொள்ளும் கொள்கை மற்றும் அதன்போது கவனத்திற் கொள்ளப்படும் நியதிகள் தொடர்பாக கற்கை செய்து, ஆசிரிய மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் யதார்த்த ரீதியிலான மற்றும் ஒழுங்கான முறைமையியலொன்றை அறிமுகப்படுத்துதல் காலத்திற்கு அவசியமானதொன்றாக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்டமையினால் இக் கற்கையானது தேசிய கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படலாயிற்று.

இது தொடர்பாக கல்வியியற் கல்லூரிகளில் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொண்ட, கல்வியமைச்சில் சேவைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் மற்றும் கல்வியியலாளர்களுடன் கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆடசேர்க்கும் அடிப்படைக் கொள்கைக்கு ஏற்புடைத்தான கலந்துரையாடலொன்று 2014 ஆம் வருடம் முதலாம் காற்பகுதியில் இடம்பெற்றது.

அவ்வாறே, கல்வியியற் கல்லூரிகளுடன் தொடர்புடைய தரவுகளைப் பெற்றுக்கொள்ளுவதன் பொருட்டு பொதுவான விடயங்களை உள்ளடக்கிய வினாக்கொத்தொன்றினை சகல கல்வியியற் கல்லூரிகளுக்கும் பெற்றுக் கொடுத்து தபாலின் ஊடாக பதிலினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு மேலதிகமாக தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளர், உப தவிசாளர், செயலாளர் உள்ளடங்களாக கல்விப் பணியாளர் சபையின் உறுப்பினர்களால் களக்கற்கை தொடர்பாக பஸ்துன்ரட்ட தேசிய கல்வியியற் கல்லூரி, சியனே தேசிய கல்வியியற் கல்லூரி, அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் ஸ்ரீபாதா தேசிய கல்வியியற் கல்லூரி என்பன தெரிவுசெய்யப்பட்டு பீடாதிபதி, உப பீடாதிபதி, பதிவாளர், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களின் தகவல்கள் 2014 ஆம் வருடத்தின் மத்திய அரைப்பகுதியாகும் போது சேகரிக்கப்பட்டன.

2014 ஆம் வருடம் முடிவடையும் போது, தேசிய கல்வி ஆணைக்குழுவின் பணியாளர் சபை, சேகரித்த தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதில் ஈடுபட்டிருந்தது.

## 2. உயர்கல்வி தொடர்பான செயற்சாதனை

### 2.1 உயர்கல்வி தொடர்பான கொள்கைப் பிரேரணை ஒன்றினை ஆக்குதல்.

2013 ஆம் வருடம் இடம்பெற்ற குழுக் கூட்டங்களுக்கு இணைந்ததாக தேசிய கல்வி ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், நிரந்தர குழு உறுப்பினர்களில் சிலர் மற்றும் தேசிய கல்வி ஆணைக்குழுவின் தவிசாளர், உப தவிசாளர் உள்ளடங்களாக கற்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுகளின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய களச்சுற்றுலா / அவதானிப்பு என்பனவற்றின் வாயிலாக ஆய்வுக் கற்கைகளுக்கு மேலதிகமாக இவ் வருடம் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள், நிர்வாக பணியாளர் சபை மற்றும் மாணவ மாணவிகள், சிறு தொகுதிகளாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக குழுக்களுடன் கட்டமைப்புக் கலந்துரையாடலொன்றினை நடாத்துதலின் வாயிலாக கொள்கையளவில் முக்கிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

அதன் வாயிலாக வெளிப்பட்ட விடயங்கள் மற்றும் பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி கொள்கைகளை ஆக்குவதற்கு அடிப்படையாக அமையும் விடயங்களை கலந்துரையாடுவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவின் வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்ட ஆரம்ப செயலமர்வொன்று 2014 ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. இச் செயலமர்விற்கு பல்கலைக்கழக உப வேந்தர்கள், பேராசிரியர்கள், சிரேட்ட விரிவுரையாளர்கள், பீடாதிபதிகள், கல்வியியலாளர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பல்வகைப்பட்ட துறைகளின் வல்லுநர்கள் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

இதன்போது வெளிப்பட்ட விடயங்களின் பிரகாரம் இனங்காணப்பட்ட விடயத்துறைகள் 08 இன் கீழ் உயர்கல்வி தொடர்பாக கொள்கைப் பிரேரணைகளை ஆக்குதல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. அவ் ஒவ்வொரு விடயத்துறையினையும் கற்கை செய்து ஆய்வுக்கற்கை ஒன்றுவீதம் சமர்ப்பிப்பதற்காக விடய நிபுணர்களினால் உள்ளடக்கப்பட்ட ஆய்வுக் குழுக்கள் ஒவ்வொரு துறை தொடர்பாகவும் தெரிவுசெய்து நியமிக்கப்பட்டனர். தீர்மானிக்கப்பட்ட விடயத்துறைகள் 08 உம் பின்வருமாறு அமைகின்றது.

- பல்கலைக்கழகத்திற்குப் பிரவேசித்தல் மற்றும் ஏனைய கோட்பாடுகள்
- அடுத்த தசாப்தத்தின் பொருட்டு பாடவிடயக் கேள்வியினை இனங் காணுதல்
- பட்டபின் கற்கைகள்
- பணியாளர் சபைக் கொள்ளளவு விருத்தி (கல்விசார் மற்றும் கல்விசாரா)
- உயர்கல்விக்குப் பிரவேசித்தலினை பரவலாக்குதல் மற்றும் முகாமைத்துவம், உயர்கல்வியுடன் தொடர்புடைய ஆய்வுகள்
- மாணவர் மற்றும் பணியாளர் சபையினரின் ஒழுக்கம்
- தொழில் வழிகாட்டல் மற்றும் அதன் மேம்பாடு
- பண்புசார் தன்மையினை உறுதிப்படுத்துதல் மற்றும் தரப்படுத்துதல்

2014 டிசம்பர் 24, 28 ஆகிய இரு தினங்கள் பத்திரிகை அறிவித்தல்களை வெளியிட்டதன் வாயிலாகவும் மற்றும் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களிலும் காட்சிப்படுத்தியதன் வாயிலாகவும் இவ் 08 தலைப்புக்கள் தொடர்பாக புத்திஜீவிகளின் மற்றும் பொதுமக்களின் அபிப்பிராயங்கள் மற்றும் ஆலோசனைகள் கோரப்பட்டது.

சேகரித்துக் கொள்ளப்பட்ட தகவல்கள் மற்றும் கொள்கைப் பிரேரணைகள் பற்றி உசாவுதல்கள் மேற்கொள்ளப்பட்டு முடிவுகளுக்கு வருவதற்காக அவசியமான நடவடிக்கைகள் 2014 ஆம் வருடம் முடிவடையும் போது தேசிய கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

## 3. தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பான செயற்சாதனை

### 3.1 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விக்கு ஏற்புடைய கொள்கைப் பிரேரணைத் தொகுதியொன்றினை ஆக்குதல்.

2013 ஆம் வருடம் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல் திட்டத்திற்கு ஏற்ப தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விக்கு ஏற்புடைய தேசிய கொள்கைச் சட்டகம் பின்வரும் விடயத்துறைகள் தொடர்பாக தயாரிக்கப்படுதல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

- மூன்றாம்நிலைக் கல்வி எண்ணக்கரு
- மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வியின் பல்வகைத்தன்மை
- மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி ஆகிய துறைகளில் உள்ள தடைகள் மற்றும் பலவீனங்கள்
- தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள்
- தேசிய தரச்சான்று நிறுவனத்தின் வாயிலாக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் பண்புசார்தன்மை
- பொது, உயர், தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்வித்துறைகளிடையே நிலவும் அந்நியோன்ய தொடர்புகள்
- தொழிற்கல்வி நிறுவனங்கள், சர்வதேசத் தகைமைகளை அளிக்கும் நிறுவனங்கள், சர்வதேச தரச்சான்றினை வழங்கும் நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் பிரிவுகளின் பயிற்சி நடவடிக்கைகள்.

### 3.2 க.பொ.த (உ.த) தொழில்நுட்பமுறைகள் பாடவிதானம் அமுல்படுத்தப்படுதல் தொடர்பான கற்கை.

பொதுக் கல்வி முறைமையின் பொருட்டு தொழில்நுட்பமுறைமை பாடவிதானத்தினை அறிமுகப்படுத்துதல் கல்வித்துறையில் விசேட திருப்புமுனையாக அமைந்தது. கடந்த தசாப்தத்தினுள் தொழில்நுட்பச் சேவைத்துறையின் முன்னேற்றம், கடற்றுறை, ஆகாய, வணிக, எரிசக்தி மற்றும் அறிவினை மையமாகக் கொண்ட மனிதவள அபிவிருத்தி தொடர்பான அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டத்திற்கு பொருந்தும் விதமாக பாடசாலை முறைமைக்குள் தொழில்நுட்ப முறைமைகள் பாடவிதானம் அறிமுகஞ் செய்தல் இடம்பெற்றது.

அதன்போது கல்வியமைச்சினால் 2013 ஆம் வருடம் தொடர்பாக நாடுதழுவிய ரீதியில் 250 பாடசாலைகளுக்கு இப் பாடவிதானம் முதன்முறையாக அறிமுகப்படுத்துதல் இடம்பெற்றது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் இப் பாடவிதானம் பாடசாலை முறைமையினுள் அமுல்படுத்தப்படும் விதமும் அதனை அமுல்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் இடையூறுகள் தொடர்பான கற்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதனை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு அவசியமான விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இவ் வருடத்தின் இரண்டாவது காற்பகுதியின் போது 3 மாகாணங்களது (மேல், தெற்கு சபரகமுவ) தெரிவுசெய்துகொண்ட 25 பாடசாலைகளை கற்கை செய்து அவசியமான தகவல்களைச் சேரித்தல் மேற்கொள்ளப்பட்டது.

2014 ஆம் வருடம் முடிவடையும் போதும் தேசிய கல்வி ஆணைக்குழுவின் பணியாளர் சபை தரவுப் பகுப்பாய்வினை மேற்கொண்டிருந்தது.

## 4. சனாதிபதி செயலகத்திற்கு வழங்கப்பட்ட அறிக்கை

### சிங்கள மொழிப்பயன்பாடு மற்றும் தரப்படுத்துகை தொடர்பான கற்கை

மேலே தரப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு விசேடமாக கற்கைகளில் ஈடுபட்டு அறிக்கையிடப்பட வேண்டிய தேசிய கல்விக் கொள்கைகளுக்குரிய கடமைப் பொறுப்புக்கள் சனாதிபதி செயலகம் மற்றும் அமைச்சரவை அலுவலகம் என்பனவற்றினால் இடையிடையே ஒப்படைக்கப்பட்டது.

அவற்றிற்கிடையே “சிங்கள அறிச்சுவடி மற்றும் மொழிப் பயன்பாட்டு ஒழுங்குகள் தொடர்பான தரம்” சம்பந்தமான கற்கை முதன்மையானதாகும்.

அதனடிப்படையில், 2014 ஆம் வருடத்தில் சிங்கள மொழியினைப் பயன்படுத்துதல் மற்றும் தரப்படுத்துதல் தொடர்பாக புத்திஜீவிக் குழுக்களுடனான ஆரம்ப கலந்துரையாடலானது சில சுற்றுக்கள் மேற்கொள்ளப்பட்டு 10 அத்தியாயங்களை உள்ளடக்கிய வரைவு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. 2014 ஆம் வருடம் முடிவடையும்போது ஆரம்ப வரைவு அறிக்கையினைத் தொகுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**2014.12.31 ஆம் தினத்திற்கு தேசிய கல்வி ஆணைக்குழுவின் பணியாளர் சபை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு அமைகின்றன.**

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை | தற்போதுள்ள பணியாளர் சபை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| செயலாளர் | 1 | 1 | - |
| சிரேட்ட கொள்கை உத்தியோகத்தர் | 3 | 1 | 2 |
| பிரதிச் செயலாளர் / உதவிச் செயலாளர் | 1 | 1 | - |
| கொள்கை ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 4 | 4 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | - |
| நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (நிதி) | 1 | 1 | - |
| நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (கொள்கை / திட்டங்கள்) | 4 | 2 | 2 |
| நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (தகவல்) | 1 | - | 1 |
| முகாமைத்துவ உதவியாளர் | 10 | 9 | 1 |
| சாரதி | 6 | 6 | - |
| பாதுகாப்பு மேற்பார்வையாளர் | 2 | 2 | - |
| அலுவலக உதவியாளர் | 4 | 4 | - |
| **மொத்தம்** | **38** | **32** | **6** |

## மனிதவள அபிவிருத்தி

தேசிய கல்வி ஆணைக்குழுவின் பணியாளர் சபை தற்போதளவில் 32 பேராக எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. கொள்கை வழங்குகை தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் அளவாய்வு கட்டாயமானதும் அத்தியாவசியமானதும் ஆகையால் அப் பணிகளின் பொருட்டு தேர்ச்சிகளைக் கொண்ட பணியாளர் சபை இருத்தல் முக்கியமானதாகும்.

அதனடிப்படையில், தேசிய கல்விக் கொள்கைகளை ஆக்குதல் தொடர்பாக பரந்த பொறுப்புக்களை நிறைவேற்றும் தேசிய கல்வி ஆணைக்குழுவின் பணியாளர் சபையினது அறிவினை இற்றைப்படுத்துதல் போன்று திறன் விருத்தி தொடர்பாகப் பயிற்சித் நிகழ்ச்சித்திட்டங்கள் அதைப்போன்று கொள்ளளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக ஈடுபடுத்துதலின் அவசியத்தன்மை நிறுவனத்தினால் இனங்காணப்பட்டுள்ளது.

## ஒதுக்கீட்டுக் கணக்கு – 2014

| பொருள் குறியீடு | விளக்கம் | மொத்த ஒதுக்கீடு | செலவீனம் | செலவீன சதவீதம் % |
|---|---|---|---|---|
| | **மீண்டெழும் செலவீனம்** | **31,584,000** | **28,887,336** | **91** |
| | **தனிநபர் வேதனங்கள்** | **17,350,000** | **15,918,385** | **50** |
| 1001 | ஊதியம் மற்றும் கூலிகள் | 11,475,000 | 10,201,553 | 89 |
| 1002 | மேலதிக நேரம், விடுமுறை கொடுப்பனவு | 750,000 | 602,270 | 80 |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 5,125,000 | 5,114,562 | 100 |
| | **பயண செலவுகள்** | **325,000** | **64,328** | **20** |
| 1101 | உள்நாட்டு | 150,000 | 64,328 | 43 |
| 1102 | வெளிநாட்டு | 175,000 | | 0 |
| | **விநியோகித்தல்** | **2,309,000** | **2,223,959** | **96** |
| 1201 | எழுது பொருட்களும் அலுவலக உபகரணங்கள் | 350,000 | 348,571 | 100 |
| 1202 | எரிபொருட்கள் | 1,800,000 | 1,721,149 | 96 |
| 1203 | உணவுகளும் உடைகளும் | 91,000 | 88,889 | 98 |
| 1205 | ஏனைய | 68,000 | 65,350 | 96 |
| | **பராமரிப்பு செலவீனம்** | **2,450,000** | **2,118,692** | **86** |
| 1301 | வாகனங்கள் | 1,500,000 | 1,491,785 | 99 |
| 1302 | ஆலையும் இயந்திரங்களும் | 800,000 | 563,651 | 70 |
| 1303 | கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 150,000 | 63,256 | 42 |
| | **சேவைகள்** | **9,150,000** | **8,561,972** | **94** |
| 1402 | தபால் & தொடர்பாடல் | 1,000,000 | 750,358 | 75 |
| 1403 | மின்சாரம் & நீர் | 1,000,000 | 973,003 | 97 |
| 1404 | வாடகை & உள்நாட்டு வரிகள் | 5,400,000 | 5,140,800 | 95 |
| 1405 | ஏனைய | 1,750,000 | 1,697,811 | 97 |
| | **மாற்றல்கள்** | | | |
| | **மூலதன செலவு** | **5,450,000** | **3,966,258** | **73** |
| | **மூலதன சொத்துக்களின் புணரமைப்பும் தரமுயர்த்தலும்** | **150,000** | **0** | **0** |
| 2002 | இயந்திரங்களும், பொறித் தொகுதிகளும் | 150,000 | 0 | **0** |
| | **மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்தல்** | **1,000,000** | **997,458** | **100** |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 500,000 | 499,506 | **100** |
| 2103 | இயந்திரங்களும், பொறித் தொகுதிகளும் | 500,000 | 497,952 | **100** |
| | **மனித வள அபிவிருத்தி** | **800,000** | **596,188** | **75** |
| 2401 | பயிற்சியும் அபிவிருத்தியும் திறன் கட்டிடம் | 800,000 | 596,188 | **75** |
| | **பிற மூலதன செலவீனம்** | **3,500,000** | **2,372,612** | **68** |
| 2502 | முதலீடுகள் | 3,500,000 | 2,372,612 | **68** |
| | மொத்தம் | **37,034,000** | **32,853,594** | **89** |

**இணைப்பு I**

## நிலையான வருமானத்தினை கையகப்படுத்திக் கொள்ளல் - 2014

| குறியீடு | விபரம் | எண்ணிக்கை | விலை (ரூ) |
|---|---|---|---|
| AC | வளிச்சீராக்கும் இயந்திரம் | 3 | 285,600.00 |
| IMMP | மல்டிமீடியா புரொஜக்டர் | 1 | 212,352.00 |
| HEL | தலைக்கவசம் (Helmet) | 1 | 2,650.00 |
| C19 | நிறைவேற்றுக் கதிரை – மத்திய | 3 | 21,262.50 |
| STL | பெரிய ஊசி பிணைக்கும் கருவி | 1 | 1,915.00 |
| UPS – BA | யு.பீ.எஸ் பற்றரி | 10 | 19,100.00 |
| COM | கணினி இயந்திரம் | 2 | 210,000.00 |
| COMM | கணினி மொனிட்டர் | 2 | 24,690.00 |
| PHAR | வன்பொருட் தட்டு (இடத்திற்கு இடம் எடுத்துச் செல்லக் கூடிய) | 1 | 9,000.00 |
| UPS | யு.பீ.எஸ் | 4 | 18,184.00 |
| FC | கடித கோவை அலுமாரி – உருக்கு | 7 | 103,155.00 |
| TU | சிறிய மேசை | 3 | 26,544.00 |
| PF | நிலைக் காற்றாடி | 4 | 19,996.00 |
| CALS | கணித்தற் பொறி | 7 | 8,274.00 |
| VR | குரல் பதிவு செய்யும் இயந்திரம் | 2 | 17,000.00 |
| DT | டேட்டா டிரவலர் | 14 | 16,350.00 |
| COM-KB | கணினி தட்டச்சுப் பலகை | 2 | 1,385.00 |
| **மொத்தம்** | | | **997,457.70** |

இணைப்பு II

## ஒதுக்கீட்டுக் கணக்கு - 2014

DGSA 1

# Appropriation Account - 2014

Expenditure Head No: 12 Name of Ministry / Department / District Secretariat:National Education Commission

| Programme Number given in Annual Estimates | Title of the Programme given in Budget Estimates | (1) Provision in Budget estimates | (2) Supplimentary Provision and Supplimentary Estimate Allocation | (3) Transfers in terms of F.R.66 and F.R.69 | (4) Total Net Provision (1+2+3) | (5) Total Expenditure | (6) Net Effect Savings/(Excesses) (4-5) | Page No. (Refference to relevant DGSA 2 format) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Rs. | Rs. | Rs. | Rs. | Rs. | Rs. | |
| 1 | Recurrent | 31,584,000 | - | 25,000<br>-25,000 | 31,584,000 | 28,887,337 | 2,696,663 | 3 |
| | **Sub Total (Recurrent)** | **31,584,000** | - | - | **31,584,000** | **28,887,337** | **2,696,663** | |
| 1 | Capital | 5,450,000 | | | 5,450,000 | 3,966,258 | 1,483,742 | 4 |
| | **Sub Total (Capital)** | **5,450,000** | - | - | **5,450,000** | **3,966,258** | **1,483,742** | |
| | **Grand Total** | **37,034,000** | - | - | **37,034,000** | **32,853,595** | **4,180,405** | |

Detailed Accounting Statements in DGSA format Numbers 2 to 10 presented in pages from 2 to 15 and other Notes presented in pages from 16 to 20 are integral parts of this Appropriation Account. We hereby certify that the figures in this account, other detailed Statements and Notes are correct and relevant accounts were reconciled with Accounts were reconciled with Treasury Books of Acounts and found correct.

Chief Accounting Officer
Name : Prof. Lakshman Jayatilleke
Designation : Chairman, National Education Commission, 126, Nawala, Road, Nugegoda, Sri Lanka.
Date : 31-03-2015

Accounting Officer
Name : H. Nilakshi N.Gunasekera
Designation : Secretary, National Education Commission, No. 126, Nawala Road, Nugegoda.
Date :

Chief Accountant/Director (Finance)/ Commissioner (Finance)
Name : S. M. Ariyarathna De Alwis, Deputy Secretary, National Education Commission, 126, Nawala Road, Nugegoda.
Date : 31.03.15

## இணைப்பு III

**ஆணைக்குழுவின் உறுப்பினர்களது தகவல்கள்**

ஆறாவது ஆணைக்குழுவின் சுயாதீன முதலாவது ஆணைக்குழுவின் கூட்டம் 2012 நவம்பர் 20 ஆம் திகதி நடாத்தப்பட்டு தனது உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன் உறுப்பினர்கள்:
தவிசாளர் : பேராசிரியர் லக்ஸ்மன் ஜயத்திலக்க அவர்கள்
உப தவிசாளர் : பேராசிரியர் ஜயந்தி குணசேக்கர அவர்கள்

### உத்தியோகபூர்வ அதிகாரத்தினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்:

| | |
|---|---|
| தவிசாளர், பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழு | பேராசிரியர் க்ஸனிக்கா ஹிரிம்புரேகம அவர்கள் |
| தவிசாளர், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு | பேராசிரியர் தயந்த விஜேசேக்கர அவர்கள், கலாநிதி சந்திரா எம்புல்தெனிய அவர்கள் 2014.06.19 ஆம் திகதியிலிருந்து |
| கல்வியமைச்சின் பிரிதிநிதி (செயலாளர்) | திரு. அநுர திஸாநாயக்க அவர்கள் |
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதி (பணிப்பாளர், தேசிய பாதீட்டுத் திணைக்களம்) | திருமதி. அயந்தி த சில்வா அவர்கள் |
| உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சின் பிரதிநிதி (செயலாளர்) | திரு. R.A.A.K. ரணவக்க அவர்கள் |

**நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:**

வணக்கத்துக்குரிய பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் அவர்கள்
கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன அவர்கள்
திரு. ஆரியரத்ன ஹேவகே அவர்கள்
திருமதி. புஸ்பா கலுபோவில அவர்கள்
பேராசிரியர். ஜயசேன கோட்டேகொட அவர்கள்
பேராசிரியர். எஸ் சந்திரசேகரம் அவர்கள்
கலாநிதி ஹிரந்தி விஜேமான்ன அவர்கள்
திருமதி அனோஜா விஜேசேக்கர அவர்கள் 2014.03.22 வரை
பேராசிரியர் தயந்த விஜேசேக்கர அவர்கள் 2014.08.14 இலிருந்து

**செயலாளர்**

பிரதீபா சேரசிங்க அவர்கள்

**இணைப்பு IV**

## கணக்காய்வு தலைமையதிபதி அறிக்கை – 2014

தலைப்புகள் 1 முதல் 22 வரையரையான விசேட செலவின அலகுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்தியின் 1 முதல் 22 வரையான தலைப்புகளுக்குரிய அலுவலகங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புகள் காண்பிக்கப்படுகின்றன.

1. விசேட செலவின அலகுக்குரிய தலைப்புகள் மற்றும் அலுவலகங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களம்/ அலுவலகம்/ ஆணைக்குழு |
|---|---|
| 1 | அதிமேதகு சனாதிபதி |
| 2 | பிரதம அமைச்சர் அலுவலகம் |
| 3 | விசேட செயற்பாடுகளுக்கான செயலகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்) |
| 4 | உயர் நீதிமன்ற நீதிபதிகள் |
| 5 | அமைச்சரவை அலுவலகம் |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு |
| 7 | நீதிச் சேவைகள் ஆணைக்குழு |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு |
| 11 | நிதி ஆணைக்குழு அலுவலகம் |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| 14 | சட்ட மா அதிபர் திணைக்களம் |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் |
| 16 | பாராளுமன்றம் |
| 17 | பாராளுமன்ற முதல்வரின் அலுவலகம் |

1

| | |
|---|---|
| 18 | பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடா அலுவலகம் |
| 19 | பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி |
| 22 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் |

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேற்கூறப்பட்ட 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விசேட செலவின அலகுகளுக்குரிய அலுவலகங்களின், ஆணைக்குழுக்களின் மற்றும் திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை கீழே குறிப்பிடப்படும் திகதிகளில் அலுவலகங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றினது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

| தலைப்பு | திணைக்களம்/ அலுவலகம்/ ஆணைக்குழு | முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 1 | அதிமேதகு சனாதிபதி | 2015.09.15 |
| 2 | பிரதம அமைச்சர் அலுவலகம் | 2015.08.21 |
| 3 | விசேட செயற்பாடுகளுக்கான செயலகம் | 2019.06.09 |

| | | |
|---|---|---|
| | (சிரேஷ்ட அமைச்சர்கள்) | |
| 4 | உயர் நீதிமன்ற நீதிபதிகள் | 2015.09.07 |
| 5 | அமைச்சரவை அலுவலகம் | 2015.05.27 |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 2015.07.14 |
| 7 | நீதிச் சேவைகள் ஆணைக்குழு | 2015.06.19 |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 2015.05.11 |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை | 2015.07.08 |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | 2015.07.08 |
| 11 | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 2015.08.12 |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | 2015.06.12 |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 2015.07.15 |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் | 2015.09.18 |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் | 2015.09.18 |
| 16 | பாராளுமன்றம் | 2015.06.16 |
| 17 | பாராளுமன்ற சபை முதல்வர் அலுவலகம் | 2015.05.25 |
| 18 | பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடா அலுவலகம் | 2015.05.27 |
| 19 | பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் | 2015.06.03 |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் | 2015.08.20 |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 2015.11.24 |
| 22 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | 2015.05.21 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்

---

ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பனவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான

கணக்கீட்டு உத்தியோகத்தர்களது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்

இறுபத்திரண்டு அலுவலகங்கள், ஆணைக் குழுக்கள் மற்றும் திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 18,461 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 17,181 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, அலுவலகங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களங்களின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்புகள் ரூபா 0.54 மில்லியன் முதல் ரூபா 642.3 மில்லியன் வரையிலான வீச்சில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 0.0029 சதவீதத்திற்கும் 3.48 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | அலுவலகம் / ஆணைக்குழு / திணைக்களம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 10,518 | 9,876 | 642 | 6.10 |
| 2 | பிரதம அமைச்சர் அலுவலகம் | 335 | 321 | 14 | 4.18 |
| 3 | விசேட செயற்பாடுகளுக்கான செயலகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்) | 533 | 440 | 93 | 17.45 |
| 4 | உயர் நீதிமன்ற நீதிபதிகள் | 365 | 159 | 206 | 56.44 |
| 5 | அமைச்சரவை அலுவலகம் | 73 | 58 | 15 | 20.55 |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 245 | 230 | 15 | 6.12 |
| 7 | நீதிச் சேவைகள் ஆணைக்குழு | 39 | 35 | 4 | 10.26 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 45 | 43 | 2 | 4.44 |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை | 18 | 15 | 3 | 16.67 |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | 201 | 196 | 5 | 2.49 |
| 11 | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 41 | 35 | 6 | 14.63 |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | 37 | 33 | 4 | 10.81 |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 191 | 154 | 37 | 19.37 |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் | 535 | 534 | 1 | 0.19 |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் | 112 | 76 | 36 | 32.14 |
| 16 | பாராளுமன்றம் | 1,729 | 1,647 | 82 | 4.74 |
| 17 | பாராளுமன்ற சபை முதல்வர் அலுவலகம் | 29 | 27 | 2 | 6.90 |
| 18 | பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடா அலுவலகம் | 49 | 36 | 13 | 26.53 |
| 19 | பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் | 118 | 111 | 7 | 5.93 |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் | 2,194 | 2,179 | 15 | 0.68 |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 1,042 | 967 | 75 | 7.20 |
| 22 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | 11 | 9 | 2 | 18.18 |
| மொத்தம் | | **18,460** | **17,181** | **1,279** | **8.47** |

## 2.2 வருமானக் கணக்கு

### மதிப்பீட்டு மற்றும் உள்ளபடியான வருமானம்

இரு திணைக்களங்களால் 2014 ஆம் ஆண்டிற்கான இரண்டு வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 133 மில்லியன் கூட்டுத் தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின்போது ரூபா 136.54 மில்லியன் கூட்டுத் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 102.66 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் குறியீடு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | மிகை, மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 20-03-02-01 | 98.00 | 100.47 | 2.47 | 2.45 |
| 20.03.02.11 | 35.00 | 36.07 | 1.07 | 3.06 |
| | 133.00 | 136.54 | 3.54 | 2.66 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

இறுபத்தொரு அலுவலகங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களங்களின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் அந்த நிறுவனங்களினால் பிற்பற்றப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியான | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியான | அதிகூடிய எல்லை | உள்ளபடியான |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1 | 00101 | 20,000,000 | 19,907,822 | 14,000,000 | 20,976,552 | 100,000,000 | 76,098,838 |
| 2 | 00201 | 5,500,000 | 3,751,041 | 3,000,000 | 3,742,317 | 27,000,000 | 20,839,140 |
| 3 | 00301 | 3,100,000 | 3,009,212 | 1,100,000 | 2,034,947 | 12,000,000 | 7,972,027 |

6

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | 00401 | 3,000,000 | 15,000 | 1,000,000 | 1,079,485 | 38,000,000 | 1,293,811 |
| 5 | 00501 | 2,600,000 | 1,262,957 | 2,000,000 | 2,428,420 | 13,000,000 | 9,747,869 |
| 6 | 00601 | 6,500,000 | 6,390,934 | 3,000,000 | 4,873,498 | 32,000,000 | 22,8887,663 |
| 7 | 00701 | 3,000,000 | 2,576,926 | 1,200,000 | 1,907,606 | 20,000,000 | 8,758,115 |
| 8 | 00801 | 1,800,000 | 1,586,334 | 1,100,000 | 1,499,694 | 12,000,000 | 3,924,086 |
| 9 | 00901 | 1,000,000 | 607,585 | 270,000 | 541,158 | 2,000,000 | 1,591,185 |
| 10 | 01001 | 5,000,000 | 2,841,981 | 3,000,000 | 4,053,906 | 25,000,000 | 14,955,210 |
| 11 | 01101 | 3,000,000 | 1,635,273 | 1,000,000 | 1,390,742 | 12,000,000 | 7,399,519 |
| 12 | 01201 | 1,500,000 | 727,214 | 600,000 | 832,722 | 6,000,000 | 2,542,827 |
| 14 | 01401 | 23,000,000 | 10,723,994 | 12,000,000 | 14,866,003 | 90,000,00 | 46,358,905 |
| 15 | 01501 | 4,000,000 | 2,017,965 | 2,000,000 | 2,730,296 | 23,000,000 | 11,820,060 |
| 16 | 01601 | 38,000,000 | 26,591,486 | 22,000,000 | 27,848,311 | 175,000,000 | 134,886,229 |
| 17 | 01701 | 2,000,000 | 1,489,347 | 800,000 | 1,267,080 | 3,500,000 | 2,974,562 |
| 18 | 01801 | 1,500,000 | 1,490,100 | 1,000,000 | 1,334,236 | 6,500,000 | 4,679,454 |
| 19 | 01901 | 2,000,000 | 1,349,458 | 1,000,000 | 1,641,570 | 9,000,000 | 4,232,573 |
| 20 | 02001 | 22,000,000 | 8,845,500 | 13,000,000 | 13,439,862 | 80,000,000 | 58,197,555 |
| 21 | 02101 | 50,000,000 | 31,447,335 | 42,000,000 | 49,464,978 | 295,000,000 | 233,587,596 |
| 22 | 02201 | 1,000,000 | 385,388 | 250,000 | 417,024 | 3,500,000 | 1,603,048 |

## 2.4 கட்டு நிதிக் கணக்குகள்

இருபது அலுவலகங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குரிய கட்டு நிதிக் கணக்குகளில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 154,788,902 மீதி காணப்பட்டது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | திணைக்களம்/அலுவலகம்/ ஆணைக்குழு | கட்டு நிதிக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரவு மீதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 7002/0000/00/0117/0014 | 48,443,261 |
| 2 | பிரதம அமைச்சர் அலுவலகம் | 7002/0000/00/0118/0014 | 5,950,366 |
| 4 | உயர் நீதிமன்ற நீதிபதிகள் | 7002/0000/00/0390/0014 | 3,624,904 |
| 5 | அமைச்சரவை அலுவலகம் | 7002/0000/00/0119/0014 | 250 |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 7002/0000/00/0297/0014 | 7,428,360 |
| 7 | நீதிச் சேவைகள் ஆணைக்குழு | 7002/0000/00/0122/0014 | 2,663,565 |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 7002/0000/00/0365/0014 | 859,619 |
| 9 | நிர்வாக மேன்முறையீட்டு நியாயசபை | 7002/0000/00/0366/0014 | 123,569 |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்களை புலனாய்வு | 7002/0000/00/0139/0014 | 776,317 |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கான ஆணைக்குழு | | |
| 11 | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 7002/0000/00/0279/0014 | 7,052,973 |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | 7002/0000/00/0256/0014 | 12,385 |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் | 7002/0000/00/0137/0014 | 5,014,390 |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் | 7002/0000/00/0138/0014 | 1,335,628 |
| 16 | பாராளுமன்றம் | 7002/0000/00/0120/0014 | 4,355,316 |
| 17 | பாராளுமன்ற சபை முதல்வர் அலுவலகம் | 7002/0000/00/0275/0014 | 185,818 |
| 18 | பாராளுமன்ற பிரதம அரசாங்க கொறடா அலுவலகம் | 7002/0000/00/0276/0014 | 514,744 |
| 19 | பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் | 7002/0000/00/0277/0014 | 663,515 |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் | 7002/0000/00/0121/0014 | 65,740,391 |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 7002/0000/00/0001/0014 | 49 |
| 22 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | 7002/0000/00/0278/0014 | 43,482 |
| | | | ---------------- |
| | மொத்தம் | | **154,788,902** |
| | | | ========== |

## 2.5 பொது வைப்புக் கணக்கு

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 22 அலுவலகங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கிடையே 16 நிறுவனங்களினது பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 759,478,446 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| தலைப்பு | திணைக்களம்/அலுவலகம்/ஆணைக்குழு | கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி வரவு/(செலவு) |
|---|---|---|---|
| | | | ரூபா |
| 1 | அதிமேதகு சனாதிபதி | 6000/0000/00/0006/0077<br>6000/0000/00/0015/0001 | 292,333,243<br>445,943,624 |
| 2 | பிரதம அமைச்சர் அலுவலகம் | 6000/0000/00/0015/0002 | 576,939 |
| 3 | விசேட செயற்பாடுகளுக்கான செயலகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்) | 6000,0000,00,0015,0190 | 477,711 |

| | | | |
|---|---|---|---|
| 5 | அமைச்சரவை அலுவலகம் | 6000/0000/00/0015/0003 | 74,097 |
| 6 | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | 6000/0000/00/0015/0008 | 2,321,609 |
| 7 | நீதிச் சேவைகள் ஆணைக்குழு | 6000/0000/00/0002/0032 | 4,175 |
| 8 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 6000/0000/00/0015/0009 | (23,075) |
| 10 | இலஞ்சம் அல்லது ஊழல் சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | 6000/0000/00/0015/0010 | 199,726 |
| 11 | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 6000/0000/00/0015/0013 | 79,500 |
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு | 6000/0000/00/0015/0014 | 30,000 |
| 13 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 6000/0000/00/0015/0017 | (10,366,732) |
| 14 | சட்டமா அதிபர் திணைக்களம் | 6000/0000/00/0015/0110 | 1,431,395 |
| 15 | சட்ட வரைஞர் திணைக்களம் | 6000/0000/00/0015/0111 | 265,475 |
| 16 | பாராளுமன்றம் | 6000/0000/00/0015/0004 | 2,117,184 |
| 20 | தேர்தல்கள் திணைக்களம் | 6000/0000/00/0015/0011 | 5,793,023 |
| 21 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 6000/0000/00/0015/0012 | 18,220,552 |
| | மொத்தம் | | **759,478,446** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், அலுவலகங்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் மேலே 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 முதல் 24 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 1 – அதிமேதகு சனாதிபதி

## 3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அக் கொடுக்கல் வாங்கல்களைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 06 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 44 | 24 | 20 |
| (iv) | ஆரம்ப நிலை | 13 | 09 | 04 |
| | மொத்தம் | 76 | 42 | 34 |

14. தலைப்பு 12 – தேசிய கல்வி ஆணைக்குழு

14.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக் கப்பட்டிருக்கவில்லை. |

14.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

பாதீட்டு முரண்கள்

---

இரண்டு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 325,000 மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 08 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

14.3 கட்டு நிதிக் கணக்கு

---

ஆணைக்குழுவின் கூட்டம் மற்றும் செயலமர்வுகள் போன்றவற்றுக்காக மீளாய்வாண்டின்போது 31 சந்தர்ப்பங்களில் ரூபா 1,103,615 முற்பணமாக வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 582,467 அல்லது 52 சதவீதம் செலவிடப்படாது மீண்டும் பணமாகவே தீர்க்கப்பட்டிருந்தது. அவ்வாறே, மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினங்கள் இனங்காணப்படாது நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினங்களை தீர்க்கும் வகையில் 06 உத்தியோகத்தர்களுக்கு திறைசேரியின் அங்கீகாரமின்றி ரூபா 75,000 வீதம் ரூபா 450,000 கூட்டுத் தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

14.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

14.4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

---

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு, பதவியணியினர் விபரம் மற்றும் கட்டு நிதித் தேவைகள் என்பன திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி திருத்தப்பட்ட அந்தத் திட்டம் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

14.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

---

வருடாந்த கொள்வனவுத் திட்டம் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் அந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 302,600 பெறுமதியான அலுவலக இயந்திர உபகரணங்களின் 05 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 14.4.3 உள்ளகக் கணக்காய்வு

ஆரம்பம் முதல் 2015 யூன் 25 ஆந் திகதி வரையிலும் உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 14.5 இணங்காமை

#### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்த சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 262(2) | 768,709 | 28 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் உபயோக ஆவணங்களில் "செலுத்தப்பட்டது" என்ற முத்திரை இடப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 261(1) | 296,205 | பதினொரு சந்தர்ப்பங்களின்போது காசேட்டில் தொடரிலக்கம் முறையாக உறுதிச்சீட்டு இலக்கமிடப்படாதிருந்ததுடன், தொடரிலக்கம் முறையாக உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் காசோலைகளது இலக்கம் தொடரிலிக்கப்படி அமையாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

---

2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிறுவனத்தினால் செலுத்தப்படுகின்ற ரூபா 25,000 இனை விஞ்சுகின்ற பெறுமதி சேர் வரி தொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிக்கை அனுப்பவேண்டிய போதிலும், ஆணைக்குழுவில் ரூபா 5,140,800 தொகையான கட்டிட வாடகைக்காக செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியாகிய ரூபா 550,800 தொடர்பான அறிக்கை அனுப்பப்பட்டிருக்கவில்லை.

14.6 செயலாற்றல்

---

2014 இன் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்

---

ஆணைக்குழுவினால் போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சாதாரண கல்வி தொடர்பான கொள்கை முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்று அச்சிடல்.

(ஆ) மூன்றாவது வகைப் பாடசாலைகளுக்காக தரவு அடிப்படையொன்றைத் தயாரிப்பதன் கீழ் மாகாணங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுத் தொகுதியொன்றைத் தயாரித்தல்.

(இ) க.பொ.த(உ.தரம்) தொழில்நுட்ப பாடப்பரப்பை அமுல்படுத்துதல் தொடர்பான ஆராய்ச்சியின் இறுதி அறிக்கையைத் தயாரித்தல்.

(ஈ) தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு ஆசிரிய பயிலுனர்களை ஆட்சேர்க்கும் கொள்கை மற்றும் அதன்போது கவனத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் தொடர்பான தரவுகளைச் சேகரித்து பகுப்பாய்வு அறிக்கையினைத் தயாரித்தல்.

(உ) சிங்கள மொழியின் பயன்பாடு மற்றும் நியமமிடலின் கீழ் வரைவு அறிக்கையொன்றை ஒழுங்கமைத்து இறுதி அறிக்கையைத் தயாரித்தல்.

(ஊ) பல்கலைக்கழகக் கல்விக்காக கொள்கை நெறியொன்றைத் தயாரிப்பதன் கீழ் பிரதேச மீளாய்வுடன் தொடர்பான தகவல்களைச் சேகரித்து தரவுக் காலப் பகுப்பாய்வு அறிக்கையைத் தயாரித்தல்.

(எ) பதவியணியினரின் தனிப்பட்ட தரவுகளைச் சேகரித்து பதவியணியினர் திட்டமொன்றைத் தயாரித்தல்.

## 14.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

மூன்று வளிச்சமநிலையாக்கி இயந்திரங்கள் ஒன்று ரூபா 95,200 வீதம் ரூபா 285,600 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 7.11.1 வழிகாட்டிக்கு புறம்பாக தொழில்நுட்ப அறிவுள்ள உத்தியோகத்தரொருவருடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு இன்றியும் ஆகக் குறைந்த கேள்விதாரரின் விலையான ரூபா 70,784 தொகையான கேள்வி காரணம் காட்டப்படாமல் நிராகரிக்கப்பட்டும் எட்டாவது கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரரிடமிருந்து அவை கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதனால் 03 இயந்திரங்களுக்கு ரூபா 73,248 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 14.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

தெரிவுப் பரிசோதனைகளின்போது வெளிப்படுத்தப்பட்டவாறு நிறுவனத்தின் மத்தியகாலத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக ரூபா 320,650 செலவில் இரண்டு செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், மத்திய காலத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு முடியாதிருந்ததுடன் ''நிறுவனத்தின் மூலம் வழங்கமுடியாத குறுகிய கால அவசர சேவைகளை வழங்குதல்'' என்பதற்கான 2014 பெப்ரவரி 21 ஆந் திகதிய 449 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விதத்தில் பயன்படுத்தி அதில் ஒருநாள் செயலமர்வு வளப்பங்களிப்புப் படியாக ஒரு நபருக்கு ரூபா 30,000 செலுத்தப்பட்டிருந்தது.

## 14.9 முகாமைத்துவ நலிவுகள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நூலகத்தின் பணிகளுக்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரொருவர் நிரந்தரமாக நியமிக்கப்படாமை, நூலகப் புத்தகங்கள் தொடர்பாக பௌதீக இருப்பு மெய்மையாய்வு ஆரம்பம் முதலே மேற்கொள்ளப்படாமை,

நூலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்படுகின்ற புத்தகங்கள் மீளக் கையளிக்கப்படாமை மற்றும் கையளிப்பதற்கு கூடுதலான காலம் எடுத்தமை மற்றும் ஓய்வுபெற்ற, இடமாற்றலாகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய மூவரினால் எடுத்துச் செல்லப்பட்ட 04 நூலகப் புத்தங்கள், 10 மாதங்கள் முதல் 04 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும், அந்த புத்தகங்கள் 2015 யூன் 25 ஆந் திகதி வரையிலும் மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ''பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களைச் சேகரித்து அத்தகவல்களை முறையாகப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் தீர்மானம் எடுத்தலுக்கான அடிப்படையாகப் பயன்படுத்தும்'' நோக்கில் கல்விப் பிரிவுகளின் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் ரூபா 938,600 நிதியுதவியைப் பயன்படுத்தி 2010 ஆண்டில் உருவாக்கப்பட்ட தரவு வங்கியின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் (தகவல்) பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது குறுங்காலப் பயிற்சியாளர்களின் சேவை பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 14.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 02 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 06 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 16 | 12 | 04 |
| (iv) | ஆரம்ப நிலை | 12 | 12 | - |
| | மொத்தம் | 36 | 32 | 04 |

**இணைப்பு V**

## நிறுவனக் கட்டமைப்பு

Organizational Structure of National Education Commission

